# பொதுக்காலத்தின் இருபத்துமூன்றாம் ஞாயிறு

# திருவழிபாடு ஆண்டு - B

# 2021-09-05

(இன்றைய வாசகங்கள்:

இறைவாக்கினர் எசாயா நூலிலிருந்து வாசகம். 35:4-7,

பதிலுரைப்பாடல்: திபா. 146:7-10,

திருத்தூதர் யாக்கோபு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம். 2:1-5,

மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 7: 31-37)

**திருப்பலி முன்னுரை**

நன்மைக்குரியவர்களே, பொதுக்காலத்தின் இருபத்துமூன்றாம் ஞாயிறு திருப்பலியை சிறப்பிக்க உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். இன்றைய திருவழிபாடு இயேசுவில் செயல்பட்ட கடவுளின் வல்லமையை உணர நமக்கு அழைப்பு விடுக்கிறது. இறைவாக்கினர்கள் முன்னறிவித்த இறைவாக்குகள் இயேசுவில் நிறைவேறியதை இன்றைய வாசகங்கள் நமக்கு தெளிவாக எடுத்துரைக்கின்றன. அற்புதங்கள் செய்கின்றவராகிய நம் ஆண்டவரை நம்பிக்கையோடு தேடிச் சென்று நன்மைகளைப் பெற்றுக்கொள்ள நாம் அழைக்கப்படுகிறோம். நமது உடல், உள்ளக் குறைகளை நீக்க அவரால் முடியும் என்ற நம்பிக்கையை மட்டுமே கடவுள் எதிர்பார்க்கிறார். நம் ஆண்டவரைப் போன்று பிறருக்கு நன்மை செய்பவர்களாய் வாழும் வரம் வேண்டி, இந்த திருப்பலியில் பங்கேற்போம்.

www.tamilcatholicnews.com

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

***நன்மைகளின் ஊற்றாம் இறைவா,***

*உம் திருமகனின் வழியில் அனைவருக்கும் நன்மை செய்பவர்களாகவும், நற்செய்தி அறிவிப்பவர்களாகவும் வாழும் வரத்தை, திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் அளித்து, உமது திருச்சபையை புனிதத்தில் வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***வரங்களின் வள்ளலாம் இறைவா,***

*உலகெங்கும் நீர் செய்து வரும் அற்புதங்களின் மேன்மையால் மக்கள் உமது வல்லமையை உணரவும், நீர் உண்மை கடவுள் என்பதை உலகம் முழுவதும் அறிந்துகொள்ளவும் துணைபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***நலந்தரும் ஊற்றாம் இறைவா,***

*உம்மை நம்பிக்கையோடு தேடி வரும் மக்களின் உடல் நோய்களையும், மன நோய்களையும் முழுமையாக குணப்படுத்தி, மற்றவர்களின் முன்னிலையில் உமது மாட்சிமிகு செயல்களின் சாட்சிகளாக அவர்களை மாற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***அன்பின் அரசராம் இறைவா,***

*தீராத நோய்கள், கடன் தொல்லைகள், மன வேதனைகள், பிரச்சனைகள் போன்றவற்றில் சிக்கித் தவிப்போர் அனைவரும், நம்பிக்கையோடு உமது உதவியை நாடவும், உம் இரக்கத்தால் அவற்றில் இருந்து விடுதலை பெற்று, வாழ்கின்ற உண்மை கடவுள் நீரே என்பதை அறிக்கையிடவும் உதவிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***வானகத் தந்தையே இறைவா, உம்மை வாழ்த்திப் போற்றுகிறோம்.***

*ஆண்டவர் இயேசு எங்கள் இதயத்தைத் திறக்க எப்பத்தா என்று மொழிய வேண்டுமென்று மன்றாடுகிறோம். கேட்க வேண்டிய குரல்களைத் தவறாமல் கேட்க உமது அருளைத் தந்தருளும். ஒடுக்கப்பட்டோருக்கும், ஓரங்கட்டப்பட்டோருக்கும் அடைக்கலமான இறைவா! எங்களை நீர் நலமோடு படைத்திருக்கிறீர். அதற்காக நன்றி கூறுகிறோம். உடல் குறைபாடுகளால் சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டவர்கள் மீது நாங்கள் உம்மைப் போன்று பரிவு காட்டவும், சிறப்பான தனிப்பட்ட கவனம் செலுத்தவும் எங்களுக்குப் புதிய பார்வையையும், ஆற்றலையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

***வாழ்வின் ஊற்றாம் இறைவா,***

*இச்சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டுத் தனிமையில் வாடும் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள், பிள்ளைகளால் விரட்டப்பட்ட பெற்றோர்கள்! நல்ல உடல்நலனையும், உள்ள அமைதியையும், பாதுகாப்பையும், அன்பையும் பெற்று மகிழ்ச்சியுடன் தங்கள் இறுதிநாட்கள் வரை வாழ இறைவா உம்மை இறைஞ்சுகிறோம்*

***குணமளிக்கும் மருத்துவரே இறைவா,***

*பெரும் தொற்றுநோயால் இன்னலுக்கு உள்ளாகி உடமைகளையும், உறவுகளையும் இழந்துத் தவிக்கும் உலக மக்களைக் கண்நோக்கியருளும். அவர்கள் விரைவில் தங்களின் வாழ்வை நலமுடனும் வளமுடனும் எதிர்கொள்ளத் தேவையான அனைத்து வரங்களையும் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை இறைஞ்சுகிறோம்.*